


# வாளின் தனிமை



வாளின் ரீங்காரம் தூக்கத்திலிருந்து என்னை எழுப்பியது. பஸ்ஸிலிருந்து பலரையும்.

லக்கேஜ் வைக்கும் இடத்தில் சூட்கேஸ்களுக்கிடையே அது கிடந்தது. பஸ்ஸின் அதிர்வோடு ஒத்திசைந்து 'கிர்......கிர்ர்......கிர்ர்' ரென்ற மொழியில் வாள் பேசத் துவங்கியது. முதலில் எனக்கு அதன் பாஷை புரியாததால் அது கிடந்த இடத்தை வெறுமனே ஒருமுறை எட்டிப்பார்த்துவிட்டு வயோதிகத்துக்கே உரிய பெரும் அலுப்புடன் மீண்டும் கண்ணை மூடினேன். விட்ட இடத்தில் தூக்கத்தைப் பிடிக்க முற்பட்டேன்.

இருட்டில் 'கிர்...சுப்பையா....கிர்ர்....சுப்பையா' என வாள் மெதுவாக என்னை அழைப்பது கேட்டது. ஆத்தாவும் அப்பத்தாளும் வெளியே திண்ணையில் தூங்கியிருந்தார்கள். மச்சுவீட்டு இருட்டுக்குள்ளிருந்து வாள் அழைத்துக்கொண்டிருந்தது. இன்று பகலில்தான் என் நச்சரிப்புத் தாங்க முடியாமல் அய்யா அதை வெளியே எடுத்துத் துருவும் களிம்பும் போகச் சுத்தம் செய்து தந்திருந்தார். பள்ளிக்கூட நாடகத்துக்காக. அய்யா வயக்காட்டுக் காவலுக்குப்போன பிறகு வாளை இன்னும் பளபளப்பாக்க வேண்டி அப்பத்தாளின் யோசனைப்படி விபூதி, கொண்டு துலக்க ஆரம்பித்தேன். துலக்கத்துலக்க அதன் வெண்கலப்பிடியும் நீண்ட கூர்நுனியும் சுடர்விட ஆரம்பித்தன.

''இது புலித்தேவன் காலத்து வாள்டா அய்யா... தலைமுறை தலைமுறையா உங்க பாட்டன் பூட்டன் எல்லாம் இதை வச்சுத்தான் குல தெய்வத்தைக் கும்பிடுவாக.'' மாட்டுத் தொழுப்பக்கம் பெரிய கல் உரலின் மீது வாளைச் சாய்த்து நான் தேய்த்துக் கொண்டிருக்க முருங்கைக் கீரையை ஆய்ந்தபடி அப்பத்தா சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவள் போனதும் நானும் வாளும் மட்டும் தனியானோம். விபூதிக் கையைத் தூசி தட்டிவிட்டுக் கிழிந்த வேட்டித்துணி கொண்டு வாள் மினுக்கினேன். ஆனால் ஒரு கையால் தூக்குவது சிரமமாயிருந்தது. வாள் இன்னும் கேலியுடன் ''ப்ப்...ர்ர்...'' என்று சிரித்தது. தம் கூட்டித் தூக்கி ஒரு சுழற்று சுழற்றினேன். காற்றில் விஸ்ஸென்ற சத்தம் கேட்டது; சுழற்றி நிறுத்தினேன். கைப்பிடி என் நெஞ்சுக்கு வந்து நின்றது விஸ்ஸென்ற சத்தம் மீண்டும் கேட்டது. வாளின் விசும்பல்.

ராத்திரி எல்லோரும் தூங்கிய பிறகு நைஸாக மச்சு வீட்டுக்குள் போய் வாளை எடுத்து மெல்ல என் மடியில் கிடத்தினேன். டவுசர் பையிலிருந்த துணியை எடுத்து அன்புடன் தடவிக்கொடுத்தபடி துடைக்கத் துவங்கினேன். வாள் விம்மிப் பெருமூச்சுவிட்டபடி புரண்டு படுத்தது.

''எதுக்கு அழுதே சாயந்திரம்?'' அப்பத்தா என் தலையை வருடிக்கொடுப்பதுபோல வாளின் கைப்பிடியை வருடினேன். செல்லமாக மறுபடி கேட்டேன் ''எதுக்கு அழுதே? சொல்லு''

வருடிக்கொண்டிருந்த என் கையைத் தட்டிவிட்டது வாள். ''இதெல்லாம் எனக்குப் பிடிக்காது'' என்றது.

ரொம்ப கரகுதட்டிப்போயிருந்தது அதன் குரல். ஒரு சாடைக்கு அது அப்பத்தாளின் குரல் போலவும் எப்பவோ செத்துப்போன ஒரு பூட்டனின் குரல் போலவும் தெரிந்தது.

''சரி'' என்று உடனே என் கையைப் பிரித்துக்கொண்டேன். ''இப்ப சொல்லு, சாயந்திரம் எதுக்கு அழுதே?''

''முதல்ல நீ என் பிடியில் வச்சிருக்கியே சந்தனம் குங்குமப்பொட்டு அதை உடனே அழி'' என்றது கோபமாக.

''ஏன்? ஏன்? எங்க அய்யா வருஷாவருஷம் ஆயுத பூஜைக்கு உன்னைக் கழுவி இப்படித்தானே பொட்டுவப்பார்!''

''இதெல்லாம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.''

வேகமாகப் பொட்டை அழித்தேன். ''உனக்கு என்னதான் பிடிக்கும் பிறகு?''

''முதல்ல உனக்கு என்ன பிடிக்கும்னு சொல்லு'' என்றது.

''எனக்கு.... எனக்கு... எல்லாமே பிடிக்கும். விளையாடறது ரொம்பப் பிடிக்கும்.''

''சின்னப்பிள்ளைக்கு அழகு விளையாடறது''

''அய்யாவுக்கு அழகு கம்பெடுத்துக் காட்டுக்குக் காவலுக்குப்போறது.''

''அப்பத்தாளுக்கு அழகு கதை சொல்றது''

''வாளுக்கு அழகு நியாயத்துக்கான சண்டையில் ஒரு வீரன் கையில் சுழல்றது.''

''உனக்கு அழகு இப்படி பஸ்ஸில் எச்சில் வழியத் தூங்கறது ஹிஹி....''

சடன் பிரேக் ஒரு ஊர்வலத்தில் முட்டி நின்றது. ஊர்வலம் முடிய இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும் போலத்தோன்றியது. இறங்கி நடந்தால் பதினைஞ்சு நிமிஷத்தில் வீடு போய்ச் சேர்ந்துவிடலாம். வேட்டியை மடித்துக்கட்டினேன்.

வெயில்பட்டு வாள் மினுங்கியது. அதைச்சுற்றியிருந்த துணியை இன்னும்சரியாக இழுத்து மூடினேன். ''யோவ் பெரியவரே...'' என்று மூன்று இடத்தில் என்னை நிறுத்திப் பொலீஸ்காரன் வாள் பற்றிக் கோபத்துடனும் சந்தேகத்துடனும் விசாரித்தான். ''சரி...சரி... சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணும். மந்திரி வர்ற நேரமாச்சு'' என விரட்டினான்.

ஜிப் கிழிந்த ரெக்ஸின் பையை இடது கைக்கு மாற்றினேன். அதற்குள்ளே ஊரில் விற்றதுபோக எஞ்சியிருந்த சில பழைய வெண்கல விளக்குகளும் கும்பாக்களும் பிதுங்கின. வாளை வலதுகைக்கு மாற்றிக் கக்கத்துக்குள் நெட்டு வசமாக வைத்து மறைத்தபடி வேகமாக நடந்தேன்.

துணியை விட்டுத் திமிறித் திமிறி முகம் நீட்டித் தன் கடும் எதிர்ப்பைச் சொல்லிக்கொண்டே வந்தது வாள். ''பேசாம வா'' என்று ஓரே அமுக்காகக் கக்கத்தில் இறுக்கிக்கொண்டு நடந்தேன்.

வேகமாக நடந்து வந்ததில் மூச்சு வாங்கியது. மெயின் கேட் அருகில் சக வாட்ச்மேன் அற்புதம் என் வருகையை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தது சோடியம் விளக்கொளியில் மஞ்சளாகத் தெரிந்தது.

பனிக்காலமாதலால் ஸ்வெட்டரும் பனிக்குல்லாவும் அணிந்திருந்தான். என்னிடம் ஸ்வெட்டர் இல்லை. மப்ளரை இறுக்கிக் கொண்டேன். மேலே போர்த்திருந்த கறுப்புக் கம்பளியை விலக்கி உள்ளே மறைத்துக் கொண்டுவந்திருந்த வாளை வெளியே எடுத்தேன். வேகமாக ஒரு சுழற்று சுழற்றிக் கீழே இறக்கி இடக்கையை இடுப்பில் வைத்து ஸ்டைலாக

நின்றேன். அற்புதம் சிரித்தான். ‘‘கொன்னுட்டே தலைவா’’ என்று வாளை வாங்கி சுழற்றிப் பார்த்துவிட்டுக் கொடுத்தான். ‘‘டூட்டி முடிஞ்சி போகும்போது காலையிலே ஆபிஸிலே போய் மேனேஜரைப் பாத்துட்டுப்போ. சாயந்திரம் சொன்னான்.’’

அற்புதம் போனதும் நானும் வாளும் தனியானோம்.

வாட்ச்மேன் கூண்டுக்குள் கம்பளியையும் வாளையும் வைத்தேன். ‘‘கொஞ்சம் இரு வந்திட்டேன்’’ என்று வாளிடம் சொல்லிவிட்டு டார்ச் எடுத்துக்கொண்டு காம்பவுண்டு சுவரைச் சுற்றி ஒரு ரவுண்டு அடித்துவிட்டு வந்தேன். டார்ச்சைக் கீழே வைத்துவிட்டு வாளைப்பார்த்துச் சிரித்தேன். சுற்றும்முற்றும் யாரும் இல்லையே என்று ஒரு பார்வை விட்டேன். இடுப்பு பெல்ட்டை இன்னும் இறக்கிக் கட்டினேன். வாள் அடக்க முடியாத சந்தோஷத்தில் அதிர ஆரம்பித்தது.

சடாரென்று பாய்ந்து வாளைக் கையிலேந்தி விர்ர்விர்ரென்று சுழற்றினேன். புளுகாண்டித்தேவனிடம் சிறு வயசில கற்ற சிலம்பு முறைகள் கால்களின் கெண்டைச்சதையில் திரண்டு திமிறின. வேகமாக வாள்வீச்சில் காற்றின் அடுக்குகள் சிதறின. சடுதியில் நான் காத்து நின்ற கம்பெனி மெயின் கேட் பகுதி போர்க்களமாயிற்று. முரசம் அதிர்கிற யானைகளின் பிளிறல். குதிரைகளின் குளம்பொலி.

எதிரிகளின் பரங்கித் தலைகள் சரிகின்றன. கம்மந்தான் தலைமையில் வந்த பரங்கிப்படைகள் சுப்புத்தேவனின் வாள் வீச்சிற்குப் பதறிச் சிதறுகின்றன. நெல்கட்டும்செவல் கோட்டை வாசலில் கேட்ட வாளின் வீச்சொலி மதுரை அரியாசனத்தை நடுக்கிற்று. பீரங்கிகளுக்குப் பின்னால் ஒளிந்தபடி புதிய பரங்கிப்படைகள் வந்தன. ஒளிந்து வந்த கோழைகளின் பீரங்கிகளுக்குத் தப்பிய புலித்தேவனின் குதிரைக்கு முன்னால் பாதுகாப்பு அரண் அமைத்தபடி பாய்ந்துகொண்டிருந்தது சுப்புத்தேவனின் வாள். குதிரைகளின் குளம் பொலியை மீறி வாளின் வீச்சொலி சேதுபதி சீமை வரைகேட்டது.

வீசிய கைகள் ஓய்ந்து கீழே சரித்த போது ராமநாதபுரம் கோட்டைவர, வாசலில் நழுவி விழுந்தது வாள். கைவிட்டுப்பிரிந்த வாள் கம்பெனி கேட்டில் மோதி ‘ணங்’ கென்ற சத்தத்துடன் விழுந்து கிடந்தது.

மூச்சிரைக்க, வியர்வை வழிந்து கண்ணை மறைக்க இடுப்பைப் பிடித்து நின்றேன்.

தூரக்கிடந்த வாளையே பார்த்து நின்றேன்.

‘‘பதிமூணு நாள் இப்படிக்கிடந்தேன்’’ என்றது வாள்.

மறவர் சீமையின் மன்னன் சேதுபதி இருபத்தாரு வருஷங்களாக மலைக்கோட்டையில சிறையிருக்க, வெள்ளைக்கும்பினியாரை எதிர்த்து வெஞ்சினத்துடன் கிளம்பிய சித்திரங்குடி மயிலப்பனின் படையில் சேர ஆப்ப நாட்டிலிருந்து படைதிரட்டி வாள் வீசி வந்தான். அதே சுப்புத்தேவன். சுப்புக்கிழவனாகப் பறங்கியர் சரக்கு மண்டிகளைக் கொள்ளையிட்டு ஆயுதங்களைக் கைப்பற்றிக் காடல்குடிச் சீமைவரை பரவிச்சென்று ஜெயக்கொடி நாட்டி வந்தது வாள்.

காளையார் கோயில் இறுதிச் சண்டையில் மயிலப்பன் மாறுவேடமிட்டுத் தஞ்சாவூருக்குத் தப்பிச்செல்லக் குன்றின் அடியில் ரத்தக்கறையுடன் சுப்புத்தேவன் கையை விட்டகலாமல் வீழ்ந்து கிடந்தது வாள். சுற்றிலும் பறங்கியர் பிணங்களும் பறங்கிக்குத்துணை போன துரோகிகள் பிணங்களுமாகக் கிடக்க, பெய்த மழையில் குருதி கலைந்து கண்கூசச் சுடர்ந்து கிடந்தது வாள்.

பதிமூணு நாள் கழித்து இடம் அறிந்து நெஞ்சிலும் வயிற்றிலும் அடித்தபடி ஆப்ப நாட்டு மறத்திகள் வந்து சேர்ந்தார்கள்.

துயரத்தின் சின்னமாக - தோல்விக்காக அல்லாமல் - தலைவன் கைபிரிந்த தனிமைக்காக வாடிய வாள் கை மாறிக் கைமாறி, ஆப்பநாடு வந்து சேர்ந்தது.

''அன்று தான் எனக்கு முதல் தடவையாகப் பூச்சூடிச் சந்தன குங்குமப்பொட்டு வைத்தார்கள்' என்று பெருமூச்சுடன் சொல்லிக்கிடந்தது வாள்.

''இப்படி வாளையே பார்த்துக்கிட்டிருந்தா அடுப்பில உலை கொதிக்காது'' என்று பின்னாலிருந்து மனைவி உறுதியாகச் சொன்னாள். தினசரி 200 தேங்காய் எண்ணெய், வாரத்துக்கு ஒரு விபூதி பாக்கட், பிடியை விளக்க தினசரி 50 புளியும் உப்பும், துடைப்பதற்குக் கிழிந்த வேட்டித்துணி என்று வாள் வேறுவிதமாக அவனுக்கு அர்த்தமாகியிருந்தது.

''கடன்காரன் மூஞ்சியிலே விட்டெறியச் சம்பாதிக்கத்தான் துப்பில்லை. ஊரிலே கிடக்கிற பழைய வீட்டையும் பண்ட பாத்திரங்களையும் வித்துக் காசாக்கிட்டு வாரும்னு அனுப்பினா இந்த வாள் ஒண்ணைக் கொண்டாந்து இறக்கிட்டாரு. எந்த நேரமும் வாளு, வாளுன்னு, ச்சை! கடன் அடையுதோ இல்லையோ இந்தக் கிழவனுக்கு மூளை அடைச்சுப் போச்சு இப்ப, எல்லாம் என் தலையெழுத்து.''

''உம்ம தலையெழுத்து அப்படி இருந்தா யாரு என்ன செய்யமுடியும் பெரியவரே. எட்டி நடையைப் போடும். எஜமான் ஸ்டேஷன்ல காத்துக் கிட்டிருக்காரு.'' வாளைத் தோளில் சுமந்தபடி நான் முன்னே செல்லப் பின்னாலிருந்து விரட்டிக்கொண்டு வந்தார் ஏட்டையா.

ஸ்டேஷன் போய்ச் சேரவும் இன்ஸ்பெக்டர் ஏட்டையாவைப் பார்த்து "யோவ், ஆளு கிடைச்சிட்டானாம். பெரியவரை விட்டுரலாம" என்றார். ''யோகமிருக்கு பெரியவரே உமக்கு'' என்ற ஏட்டையா முதுகில் தட்டினார். மிக நீளமான ஆயுதம் கொண்டு குத்திக்கொலை செய்யப்பட்ட வாலிபனின் முகத்தை யோசித்தபடி திரும்பினேன். இன்ஸ்பெக்டர் ''யோவ்.... கொஞ்சம் இப்படி வாரும்'' என்று ஞாபகம் வந்தது போலக் கூப்பிட்டார். ''ஆமா... இந்த வாள் வச்சிருக்க லைசென்ஸ் இருக்கா உம்மிடம்?''

''இது எங்க பரம்பரை வாள் சார். தலைமுறை தலைமுறையா எங்க வீட்ல இருக்கு.''

''யோவ். விளக்கெண்ண... பரம்பரை மயிரு மட்டைனுக்கிட்டு, பப்ளிக் ஆயுதம் வச்சிருக்கிறது சட்டப்படி குற்றம் தெரியுமா?''

''நாங்க மட்டுந்தான் ஆயுதம் வச்சிருக்கலாம்'' என்று விளக்கினார் ஏட்டையா.

''துப்பாக்கிக்கு மட்டுந்தான் சார் லைசன்ஸ் வேணும். இது வீட்டுவாள் தானே'' என்றேன். வீட்டுவாள் என்ற வார்த்தையைக் கேட்டதும் என் கையைத் திமிறிக்கொண்டு கோபத்துடன் கீழே டங்கென்று குதித்தது வாள்.

சத்தத்தால் கொஞ்சம் திடுக்கிட்ட இன்ஸ்பெக்டர், ''யோவ் ... சரியா பிடியுமையா.. கால்ல கையிலே போட்டுத் தொலையாம'' என்றுகத்தி மூலத்தை பார்க்க போட்டுவிட்டு ரைட்டரிடம் அந்த ஜி.ஒ.வைக் கொண்டுவரச் சொன்னார். ''அந்த லிஸ்ட்டில் வாள் இருக்கான்னு பாரு.''

ரைட்டர் தேடுதேடென்று ஃபைலைத் தேடிக்கொண்டே இருந்தார். இன்ஸ்பெக்டருக்கு கோபம் வந்துவிட்டது. ''நீரு தேடிக்கிழிச்சது போதும்'' என்று நிறுத்திவிட்டு ''யோவ் பெரிசு... நாங்க ஜி.ஒ.வைப் பார்த்துச் சொல்கிறோம். அதுவரைக்கும் இதை வெளிய எடுக்கப்படாது. லிஸ்ட்ல இருந்ததுன்னா... உடனே வாளை ஸ்டேஷன்ல கொண்டுவந்து ஒப்படைச்சிறணும் தெரியுதா..'' உடன் ஒரு துக்கம் வந்து மனசில கவிந்தது.

வீட்டில் பாய் விரித்து வாளையும் என் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டேன். மனைவியும் குழந்தைகளும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். உடனே துண்டை விரித்து வாளை

மறைத்தேன். துண்டையும் மீறி வெளியே எட்டிப்பார்த்தது. எனக்குக் கண் கலங்கி விட்டது. ''ஊரிலே வீட்டை வாங்கியவனுக்கே இதைத் தானமாகக் கொடுத்து வந்திருக்கலாம். இந்தச் சீரழிவு தேவையா?'' என்றாள் அடுப்பிலிருந்த படி; அவனிடம் விட்டு வந்திருந்தால் இந்நேரம் பேரிச்சம்பழத்துக்குப் போட்டிருப்பான்.

காலையில் டூட்டி முடிந்து வந்ததும் வாளைத்துடைத்து எண்ணெயிடுவதும் வீட்டு முற்றத்தில் நாலு வரிசை அடியெடுத்துச் சுழற்றுவதும் வழக்கமாயிற்று. கம்பளிக்குள் மறைத்து வாளை டூட்டிக்கு எடுத்துச் செல்ல முயன்றபோது மனைவி தடுத்தாள். நானும் ''சரி, ஆனால் ஒரு சத்தியம் நீ செய்து தர வேண்டும்'' என்றேன். அவளும் உடனே ''இனிமேல் முள் விறகு தறிக்கவோ கருவாடு மீன் அறுக்கவோ வாளைப்பயன்படுத்தமாட்டேன்'' என்றாள். என் தலையில் கை வைத்துச் சொல் என்று வற்புறுத்தினேன். அவள் அழுது விட்டாள். ''என் ராசா.... உமக்கு என்னய்யா ஆச்சு.... என் ராசா'' என்று என் தலையில் கை வைத்து அழுதாள். நானும் கொஞ்சம் கலங்கிவிட்டேன்.

மறுநாள் ஓட்டப்பிடாரத்தில் அவளுடைய அக்கா மகள் சடங்குக்காக எல்லோரும் கிளம்பியபோது ''எனக்கு லீவு கிடைக்கவில்லையே என்ன செய்ய'' என்று ரொம்ப வருத்தமாக நின்றேன். ''சரி... அப்ப நாங்க போறோம்'' என்று கிளம்பிப் போனார்கள். அவர்கள் அங்கிட்டுப் போகவும் வாளைப் பார்த்துக் கண்ணடித்துச் சிரித்தேன்.

வாளுக்கு ஏக சந்தோசம். கருவாடு நறுக்கவும் விறகு வெட்டவும் கூடாதென்று அவளிடம் சத்தியம் வாங்கியதில் வாள் ஏகத் திருப்தியடைந்திருந்தது. பெருமையாகப் பார்த்துக்கொண்டேயிருந்தது என்னை.

கம்பெனி வாசலுக்கு ரெண்டு பேருமாக ஏக சுதந்திரமாய்ப் போய்ச் சேர்ந்தோம். குதித்துக் குதித்துச் சுழற்றினேன். களைத்துப் படுத்திருந்தபோது என் மார்பில் தலைவைத்து ஜின்னிங் பேக்டரியில் என் பாட்டன் சுப்பையா பஞ்சுப்பொதிகளை அடித்து உலர்த்துவதற்குத் தன்னைப் பயன்படுத்திய கொடுமை பற்றிப் பேசியது. ''அது கூடப் பெரிசில்லை சுப்பு... சுதந்திரப் போராட்ட வேள்வியில் நாடு தகித்துக் கொண்டிருந்த போது உன் பாட்டன் என்னைப் பல வருஷம் கதர்க் கடையில் நூல் அறுக்கவும், துணி கிழிக்கவும், பார் சோப்புகள் அறுக்கவும் போட்டுவிட்டான். சுதந்திரத்திற்குப் பிறகு ஓரேயடியாக இருட்டு மூலையில் கடாசித் துருவும் களிம்பும் ஏற விட்டுவிட்டான்'' என்று பெரிசாகப் பெருமூச்சு விட்டது.

சடங்கு முடிந்து ஒட்டப்பிடாரத்திலிருந்து வீடு திரும்பியவர்கள் நான் ஒப்பந்தத்தை மீறியதைக் கண்டு கோபப்பட்டார்கள். ஆனால் இந்த மூன்று நாளில் நான் லெதர் தைக்கிற பாய் கடையில் சொல்லி ஒரு உறை தைத்து இடுப்போடு எந்நேரமும் கிடக்கும்படி இடுப்பு வாரும் தைத்து இறுக்கி மாட்டி விட்டிருந்தேன். அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சும்மா கூப்பாடு போட்டுக்கொண்டு கிடந்தார்கள்.

பக்கத்து வீட்டான் மத்தியஸ்தம் பண்ண வந்தான். உங்களுக்கும் வேண்டாம் அவுங்களுக்கும் வேண்டாம், பேசாம இந்த வாளை ஒரு கோயில்ல ஒப்படைச்சிடலாம் என்றான். ''போயி உன் சோலியப் பாரு'' என்று கத்தினேன். ஒருமுறை வேகமாக வாளைப் பாதி உருவி, எப்படி... என்று வாளிடம் கண்ணடித்தேன். வாளை உருவியதைப் பார்த்ததும் அவன் ஓடி விட்டான். எல்லோருடைய சத்தமும் அடங்கிவிட்டது. நான் உடைவாளுடன் எப்பவும் அலையலானேன்.

அடுத்த வாரத்தில் கம்பெனி முதலாளி கூப்பிட்டு அனுப்பினார். ''வாளை வெளியே கழட்டி வச்சிட்டு உள்ளே வாங்க'' என்றார். நான் ''உள்ளே வரலை'' என்றேன். அவர்வெளியே வந்தார். ஆயிரம் ரூபாயைக் கையில் கொடுத்து ''இன்னிக்கோட கணக்கு முடிச்சிக்கிடலாம்'' என்றார். எனக்குக் கோபம் வந்தது. ''எத்தனை வருஷம் இங்கவேலை பார்த்திருக்கேன்?'' வாளை கோபத்துடன் உருவினேன். ''சரி, சரி கோவப்படாதிக அண்ணாச்சி'' என்று வழிக்கு வந்தான். ''ஏ.... அண்ணாச்சிக்கு ரிடையர்மண்ட் மாதிரி கணக்குப்போட்டு செட்டில் பண்ணுங்கப்பா''என்று சொன்னான்.

ஓய்வு பெறுகிறவர்களை மாலை போட்டு வேனில் ஏற்றி வீடு கொண்டு விடுகிற வழக்கம் கம்பெனியில் இருந்தது. நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். குதிரையில் வேண்டுமானால் போகிறேன் என்று சொன்னேன். குதிரை வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். வண்டியில் பூட்டி வைக்க வேண்டிய மிருகமா இது, பாவிகளா.... என்று சத்தம் போட்டேன். வண்டியிலிருந்து விடுபட்டுப் புரவி என் அருகில் வந்து நின்றது.

வாளைக் கையில் உருவிய வேகத்தில் புரவியின் மீது பாய்ந்தேறினேன். வயிற்றில் உதை பட்டதும் கடுகி விரைந்தது. நகரத்து வீதிகளில் குளம்புகளின் துள்ளல் எதிரொலித்தது. நூறுநூறாய்க் குழந்தைகள் கூடிப் பின்தொடர்ந்தார்கள். சுழன்று வீசிய என் வாளின் பேச்சு அவர்களுக்குப் புரிந்தது. ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்தார்கள்.

குழந்தைகளின் ஆரவாரம் பின்தொடரக் காற்று வெளியைக் கிழித்துக் கொண்டு முன்னேறிச் சுழன்றது வாள்.

*தமிழ்ச்செல்வன்*

## அரும்பதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| லக்கேஜ் | - பொதி | கும்பா | - பாத்திரம் | மச்சுவீடு | - மாடிவீடு |
| டூட்டி | - தொழில் | கடாசி | - வீசி | | |
| வெஞ்சினம் | - கடுங்கோபம் | விசும்பல் | - சிணுங்குதல் | | |

## பயிற்சி

1. சுப்பையா வாளைப்பேணுவதற்குக் கையாண்ட முறைகள் எவை ?
2. வாளின் குரல் யாரை நினைவூட்டியது ?
3. சுப்பையாவிற்கு வாளின் மீதிருந்த பற்று கதையில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
4. போரின் போது வாளின் சிறப்புப் பங்களிப்பு யாது ?
5. சுப்பையா மீது குடும்பத்தவர் கொண்டிருந்த அபிப்பிராயம் யாது ?

பின்வரும் வாக்கியங்கள் யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டவையென எழுதுங்கள்.

1. ‘‘இதெல்லாம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது’’
2. ‘‘இந்த கிழவனுக்கு மூளை அடைச்சுப் போச்சு’’
3. ‘‘சரி, சரி, கோவப்படாதீங்க அண்ணாச்சி’’

## செயற்பாடு

1. ‘வாள்’ பற்றிய வருணனை ஒன்று எழுதுங்கள்.
2. ‘வாளின் தனிமை’ என்ற தலைப்பில் கற்பனைக் கவிதை ஒன்றை ஆக்குங்கள்.
3. இக்கதைபற்றி ஆசிரியருடன் கலந்துரையாடி, திறனாய்வு செய்யுங்கள்.

## ஆக்கத்திறன்

### கட்டுரை - பயிற்சி

கட்டுரை எழுதும் முறை, அவற்றின் வகைகள், போன்ற விபரங்களைப் பற்றித் தரம் 10 இல் தெரிந்து கொண்டு கட்டுரைகள் எழுதியிருப்பீர்கள். இனி, பின்வரும் பயிற்சிகளைச் செய்யுங்கள்.

1. தரப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு கட்டுரைகள் எழுதுங்கள்.

(அ) தொழிற்கல்வியின் சிறப்பு

முன்னுரை : கல்வி என்பது வாழ்க்கைமுறை; வாழும் வழியே கல்வி.

(1) தொழிற்கல்வியின் சுருக்கவரலாறு : மரபு முறையாகத் தொழில்களைப் பயிற்றுதல்; கைத்தொழிற் புரட்சியும் தொழிற்கல்வி வளர்ச்சியும், தொழிற்கல்வியும் தொழினுட்பமும், தொழிற்கல்விக்குக் கிடைத்த புதிய அந்தஸ்து.

(2) தொழிற்கல்வியின் அவசியம் : தொழிலின்றி வளமில்லை. தொழிற்கல்வி தொழிற்றிறனை அதிகரிக்கும். உற்பத்தி கூடும். வாழ்க்கைத்தரம் உயரும்.

(3) மூலவளங்களும் தொழிற்கல்வியும்

(4) பாடசாலைகளிலும் பிறநிலையங்களிலும் பல்கலைக்கழகத்திலும் தொழிற் கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்.

(5) தொழிற்கல்வியை விருத்தி செய்வதிலுள்ள பிரச்சினைகள்.

முடிவுரை : தொழிற்கல்வியின் எதிர்காலம்.

(ஆ) பொதுசனத்தொடர்புச் சாதனங்கள்

முன்னுரை : பண்டைய காலங்களில் மக்களோடு தொடர்பினை ஏற்படுத்த உதவிய சாதனங்கள்; அச்சியத்திரத்தின் கண்டுபிடிப்பு; இலத்திரனியல் சாதனங்களின் கண்டுபிடிப்பு.

(1) தொடர்பு சாதனங்களின் வரலாறு.

(2) அவற்றின் உருவமும் அவை தாங்கும் பொருளும்.

(3) தொடர்பு சாதனங்களின் நோக்கம் - பொதுசன அபிப்பிராயங்களை உருவாக்குதலும் வெளியிடுதலும்; பல்வேறு துறை சார்ந்த அறிவினைப்பரப்புதல், பண்பாட்டினை வளர்த்தல்.

(4) தற்காலத்தில் இவற்றின் பங்களிப்பு

(5) எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும்.

முடிவுரை : புதினங்களைப் பரப்பி அறிவை விருத்தி செய்வதாலும், சமூக வாழ்வுக்கு வேண்டிய கருமங்களில் அறிவுரை புகட்டுவதாலும், உலக நடப்புகளை உடனுக்குடன் அறிய உதவுவதாலும் தொடர்பு சாதனங்கள் மக்களிடையே பெரியதொரு சக்தியாக இருந்து வருகிறது.

2. பின்வருவனவற்றுள் ஒன்று பற்றி வரலாற்றுக் கட்டுரை எழுதுக.

(அ) எனது பாடசாலை

(ஆ) தமிழ்த் திரைப்படங்கள்

(இ) உலகுக்கு ஆக்கத்தேடித்தந்த விஞ்ஞானி ஒருவர்

(ஈ) நூல் நிலையத்திலுள்ள புத்தகமொன்றின் சுயசரிதை

3. பின்வருவனவற்றுள் ஒன்று பற்றி வருணனைக் கட்டுரை எழுதுக.

(அ) தீ விபத்துக் காட்சி

(ஆ) சிரமதானம் செய்தோம்

(இ) சுதந்திர தினம்

(ஈ) எனது கிராமம் நகரம்

4. பின்வரும் தலைப்புகளில் ஒன்றுபற்றி விவரணக்கட்டுரை வரைக.

(அ) சூழல் காப்போம்.

(ஆ) போரும் சமாதானமும்

5. கற்பனைக் கட்டுரை வரைக

(அ) தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் எனக்கு முதற்பரிசு கிடைத்தால்........

(ஆ) நான் இந்நாட்டின் ஜனாதிபதியானால்..........

(இ) திக்குத் தெரியாத காட்டில் நான் சிக்குண்டபோது.............

(ஈ) கி.பி. 2050ல் உலகம்............

6. பின்வரும் தலைப்புகளில் கட்டுரை எழுதுக.

(அ) தொழிலாளர் நலம் பேணுதல்

(ஆ) மனிதனும் சூழலும்

(இ) கல்வி அழகே அழகு

7. பின்வரும் உரைப்பகுதியை வாசித்தபின் அதைத் தொடர்ந்து ஒரு கட்டுரையாக்கி ஏற்ற தலைப்பு இடுக.

நள்ளிரவு நேரம். குளிர்காற்றை ஊடறுத்துக்கொண்டு வேகமாக ஓடிக்கொண்டிருந்த புகைவண்டி ஒரு குலுக்கலோடு திடீரென்று நின்றது.................

## மொழிவளம்

## நிறுத்தக்குறிகளின் சில சிறப்புப் பிரயோகங்கள்

எழுத்துமூலம் கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதற்குத்துணையாக, நிறுத்தக்குறிகள் பயன்படுகின்றன. பேசும்பொழுது ஒருவர் தமது குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும், தாமதித்தும், நிறுத்தியும் கருத்துக்களைத் தெளிவாகப் புகட்ட முடியும். எழுத்தில் இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துவதற்குக் குறியீடுகள் துணைநிற்கின்றன.

சொற்களுக்கிடையில் இடை வெளியில்லாமலும் பந்தி பிரிக்காமலும் குறியீடு களில்லாமலும் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும் விடயங்களை வாசித்துக்கொண்டு செல்கையில், கண்கள் சலிப்படைந்து விடும்.

கண்களுக்கு ஆறுதல் தரவும் கருத்துற நோக்கவும் சொற்களுக்கிடையே இடைவெளிகளும் நிறுத்தக் குறியீடுகளும் தவிர்க்க முடியாது வேண்டப்படுகின்றன. முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினா, மெய்ப்பாடு, அனுவாதம் என்னும் தரிப்புகளை உபயோகித்தல் பற்றி

முன்னர்ப் படித்தோம். இப்பாடத்தில் மேலும் சில குறியீடுகள் பற்றிப் பார்ப்போம்.

விட்டிசைக்குறி (-)

அ. கணிதத்திலே கழித்தலைக் குறிப்பதற்கு இக்குறியீடு பயன்படுகின்றது. எழுதப்படும் வசனங்களிலே கருத்துச் சடுதியாகத் திசை திரும்பும் பொழுதும் தொடர்ச்சி குன்றும் பொழுதும் விட்டிசைக் குறியினைப் பயன்படுத்தலாம்.

உ-ம் அந்தப்பாட்டு - அதை நான் கேட்டேன்
இழிவாகக் கூறும் வழக்கமோ - கருதும்
சுபாவமோ என்னிடம் கிடையாது
உணர்ந்தோம் - இனிச் செயலில் அறிவோம்.

ஆ. குறித்த ஒரு சொல்லிற்கு அழுத்தங் கொடுப்பதற்கும் விட்டிசைக் குறி பயன்படும்.
உ-ம் இத்தனை சொற்களைக் கையாண்டும் -
கருத்துத் தெளிவாகவில்லை
நாமெல்லாம் ஒன்று கூடி - வர்க்க நலனுக்காக உழைப்போம்
எங்களின் இலட்சியம் - ஒருமைப்பாடே

மேற்குறிப்பிட்ட வசனங்களில் முறையே கருத்து, வர்க்கம், ஒருமைப்பாடு ஆகிய சொற்களுக்கு அழுத்தங் கொடுப்பதற்கு விட்டிசைக்குறி பயன்படுத்தக் கூடாது.

இ. பல சொற்களை ஒரே தொகுதியிற் கொண்டு வருவதற்கும் விட்டிசைக் குறியினைப் பயன்படுத்தலாம்.
உ-ம் கண்ணன், மணி, காதர், காந்தன் - எமது வகுப்பே கூடியது.
சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் - இந்நாட்டின் புதல்வர்.

ஈ. சொற்கள் அல்லது பெயர்கள் தவறியவிடத்தும் இக்குறியீட்டினைப் பயன்படுத்தலாம்.
உ-ம் திரு.- அவர்களைத் தெரியுமா? அந்த நூலின் பெயர் -
செய்யுளிலும் விட்டிசைக்குறி பயன்படுகின்றது.
உ-ம் கேட்கு மொழியி லெல்லாம் நந்தலாலா - நின்றன் கீத
மிசைக்குதடா
நந்தலாலா.
காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ வோடி
ஒளிக்கின்ற தென்னோ உரை.

ஊ. சொற்களைச் சுருக்கி எழுதும்போது இக்குறி பயன்படும்.

| | | |
|---|---|---|
| உ-ம் | உதாரணம் | : உ-ம் |
| | இதன்பொருள் | : இ-ள் |
| | ஆசிரியர் | : ஆ-ர் |
| | மொழிபெயர்ப்பாளர் | : மொ-ர் |

எ. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதும்போது இக்குறி பயன்படும்.

உ-ம் இ-ள்: நாற்றடம்புயக் கண்ணுதல் - நான்கு விசாலித்த புயங்களையும் நெற்றிக்கண்ணையும் உடையவராகிய சிவபெருமான்: நந்தியம் பெருமான்

- நந்தி தேவரானவர் ; போற்றி முன் செல் - போற்றியவாறு முன்புறத்திற் செல்ல...... எ-று

ஏ. காலம், இடம், எண் என்பவற்றின் தொடர்ச்சியைக் குறிப்பதற்கு இக்குறி பயன்படும்.

உ-ம் தென்மேல் பருவக்காற்றுக் காலம் :
வைகாசி - புரட்டாதி
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வசு வண்டி
4.00 மணிக்குப் புறப்படும்.
காலை 8.00 - மாலை 4.15 : அலுவலக நேரம்.

**தனிநிலைத் தொடர்க்குறி (-......................-)**

இரண்டு விட்டிசைக்குறிகளைக் கொண்டதே தனிநிலைத் தொடர்க்குறியாகும்.

அ. வசனத்தினிடையில் அதனோடு தொடர்பு குன்றிய சொற்றொடரினைக்கையாண்டு எழுதும் போது இக்குறியீடு உபயோகிக்கப்படுகின்றது.

உ-ம் கோபமடைந்த நான் - என்ன செய்வதென்று
தெரியவில்லை - புத்தகத்தை வீசியெறிந்தேன்.

ஆ. ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று சொற்களையோ, சொற்றொடர்களை யோ, குறியீடுகளையோ எழுதும்பொழுதும் இக்குறியிடுகையாளப்படுகின்றது.

உ-ம் மொழியின் இயல்பான வெளிப்பாட்டு முறை எண்ணம் -
பேச்சு - எழுத்து என்பதாகும்.

இவ்வாறு சிக்கனமான வகையில் - இறுக்கமான முறையில் - உரையாடல்களை அமைப்பதே சிறந்தது.

இ. தொடர்ச்சியாக, 'உம்' என்ற இடைச்சொல்லினைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகவும் தனிநிலைத்தொடர்க்குறி உபயோகிக்கப்படுகின்றது.

அழகு - அமைதி - அங்கே காணப்படும்.

**அடைப்புக்குறி (...................)**

அ. ஒரு சொல், சொற்றொடர், வசனம் ஆகியவற்றின் பொருளையோ, சிறப்பு விளக்கத்தையோ, அதற்குப் பக்கத்தில் எழுதும்பொழுது அடைப்புக்குறி பயன்படுகின்றது. இதற்குப் பதிலாக, தனிநிலைத் தொடர்க் குறியையும் பயன்படுத்தலாம்.

உ-ம் அந்தக்கடா(வினா) அவன் மனத்திலே பதிந்தது.

அவன் கேட்ட விவசாயப் பண்டங்கள் (தானியங்கள், கிழங்குகள், பழங்கள்) அங்கே கிடந்தன. இலக்கியங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும் (இலக்குக் கொண்டதே இலக்கியம் என்பர்)

ஆ. சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றினைத்தொடர்ந்து அவற்றின் மொழி பெயர்ப்பினை எழுதும் பொழுதும் அடைப்புக்குறி கையாளப்படுகின்றது. வரைபடத்தின் அமைப்புக் காரணத்தோடு அமைந்ததாகக் காணப்படும்.

இ. குறித்த மனிதர் வாழ்ந்த காலத்தைக் காட்டுவதற்கும், குறித்த சம்பவங்கள் நிகழ்ந்த ஆண்டுகளைக் காட்டுவதற்கும் அடைப்புக்குறிகள் பயன்படுகின்றன.

முதலாங் குலோத்துங்கசோழன் காலத்தில் (கி.பி. 1078-1118) நிகழ்ந்த கலிங்கப் போரைக் "கலிங்கத்துப் பரணி" என்னும் பிரபந்தத்திற் சயங்கொண்டார் பாடியுள்ளார்.

திரு.சி.வை. சின்னப்பாபிள்ளை என்பவர் ''விஜயசீலம்'' (1916) ''வீரசிங்கன் கதை'' (1905) முதலிய நாவல்களை எழுதினார்.

**ஒற்றை அனுவாதக் குறி ''..........................''**

கூற்றுக்குட் கூற்று வருகையில் இது பயன்படும்.

''ஆகவே, 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற வள்ளுவர் வாய் மொழியை நாம் மறத்தலாகாது'' என்றார் விரிவுரையாளர்.

அனுவாதக்குறியின் மற்றுமொரு பிரயோகம் :

ஒருவரின் கூற்று, பல பந்திகளிலே தொடர்ந்து வருமானால், கூற்றின் தொடக்கத் திலும் இறுதியிலும் எல்லாப் பந்திகளின் தொடக்கத்திலும் மேற்கோட்குறி இடப்படும்.

உ-ம் ஆறுமுகநாவலர் தமது நாலாம் பாலபாடத்தில், ''சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பதினைந்து தரமாயினும், இருபத்தொரு தரமாயினும் பிரதஷிணம் பண்ண வேண்டும்.

''விநாயகரை ஒரு தரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதி தேவியாரையும் விஷ்ணுவையும் நந் நான்கு தரமும் பிரதஷிணம் பண்ணல் வேண்டும்.

''பிரதஷிணம் பண்ணும் ஆவரணத்திலே தூபிநிழலேனும் துவசத்தம்ப நிழலேனும் இருந்தால், அந்த நிழலில் மூன்று கூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லல் வேண்டும். கடவுள் உற்சவம் கொண்டருளும்பொழுது அந்த நிழல் இருப்பினும், நீக்காது செல்லலாம்.

''அபிஷேக காலத்தில் உட்பிராகாரத்திலே பிரதஷிணம் நமஸ்கார முதலானவை பண்ணலாகாது'' என்று எழுதியுள்ளார்.

பயிற்சி

1. பொருத்தமான இடங்களில் விட்டிசைக் குறிகளை இடுங்கள்.
   - அ. பொறுத்திருப்போம் தர்மத்தை அதன்பின்பு வெல்லக்காண்போம்
   - ஆ. சிவந்த செவ்வந்தி மலர் அதை நான் பறித்தேன்.
   - இ. குத்துவிளக்கு அரிக்கன் இலாம்பு வெளிச்சமேயின்றிக்கிடந்தன
   - ஈ. அவன் பாடினான் பொருள் பொதிந்த கவிதைகள்
   - உ. 'ஓடிவருகையிலே கண்ணம்மா உள்ளங்குளிருதடி'

2. தனிநிலைத் தொடர்க்குறிகளிட்டு வாக்கியங்களைப் பூரணமாக்குங்கள்.
   - அ. எனது நண்பனைக் கண்டதும் மனந்திறந்து சொல்கின்றேன் மகிழ்ச்சியுடன் பேசலானேன்.
   - ஆ. சிறந்த இலக்கியங்கள் சிறப்பாகச் சமூக வாழ்க்கையைத் தெளிவாகப படம் பிடித்துக்காட்டுபவை எந்நாளும் நிலைத்து நிற்கும் கலா சிருஷ்டிகளாகும்.
   - இ. நாங்கள் கற்கும் பொழுது செயல் முறையிலே செய்து கற்றல் சிறந்த பயன்களைத் தரும்.

3. அடைப்புக்குறிகளையிட்டு வாக்கியங்களைத் தெளிவாக்குங்கள்.
   - அ. அந்த நிகழ்ச்சி நடந்தபொழுது 1970 எல்லாரும் மகிழ்ந்தனர்.
   - ஆ. நான் கூறிய புலவர்கள் சோமசுந்தரப்புலவர், சின்னத்தம்பிப்புலவர் இந்நாட்டின் வளத்தைப் பாடினர்.
   - இ. முதலைக்கண்ணீர் வடித்தல் போலியாக இரங்குதல் அவனது வழக்கம்.

இலக்கணம்

## இயல்பு வழக்கும் தகுதி வழக்கும்

எந்தப்பொருளுக்கு எந்தச்சொல் அமைந்ததோ, அந்தப்பொருளை அந்தச்சொல்லால் வழங்குவதற்கு இயல்பு வழக்கு என்று பெயர். இது மூன்று வகைப்படும்

1.இலக்கணமுடையது

2.இலக்கணப்போலி

3.மரூஉ

### இலக்கணமுடையது

இலக்கணத்திற்கு உட்பட்டுக் குற்றமில்லாமல் வழங்கி வருவது.

சான்று : குயில் கூவ மயில் ஆட மருதம் வீற்றிருந்தது.

தமிழின் சிறப்புத் தரணியெல்லாம் பரவுகின்றது.

சொற்கள் முறை பிறழாமல் இலக்கணப்பிழை இல்லாமல் வந்துள்ளன.

### இலக்கணப்போலி

இலக்கணத்திற்குட்பட்ட இரண்டு சொற்கள் நாளடைவில் மாறி முன் இருக்கவேண்டிய சொல் பின்னாகவும், பின்னால் இருக்கவேண்டிய சொல் முன்னாகவும் முறை பிறழ்ந்து அமைந்திருக்கும். இவற்றைச் சான்றோர் ஏற்றுக்கொள்வர். இவை இலக்கணத்திற்குட்படா விட்டாலும் இலக்கணமுடையது போலச் சான்றோரால் வழங்கப்பட்டு வருவதால் இவை இலக்கணப்போலி ஆகும்.

| இலக்கணமுடையது | இலக்கணப்போலி |
|---|---|
| இல்முன் | முன்றில் |
| (இல்லத்தின் முன்னால் முற்றம்) | முன் + இல் |
| நகர்ப்புறம் | புறநகர் |
| (நகர்ப்பக்கம்) | புறம் + நகர் |
| இல்வாய் | வாயில் |
| (இல்லத்தின் வாய்) | வாய் + இல் |
| வாய்க்கடை | கடைவாய் |
| வாயின் கடைப்பகுதி | கடைசி + வாய் |

இவற்றை விட எழுத்துப்போலிகளாக வரும் சொற்கள் ஓர் எழுத்துக்குப் பதிலாக இன்னொரு எழுத்து வந்து அதே பொருளைத் தருமாயின் அது போலி எனப்படும்.

மொழி முதற் போலி - ஐயர், அய்யர்

ஐந்து, அஞ்சு

ஔவை, அவ்வை

| | | | |
|---|---|---|---|
| மொழி இடைப்போலி | - | கோயில் | கோவில் |
| | | சுகயீனம் | சுகவீனம் |
| மொழிக் கடைப்போலி | - | சாம்பல் | சாம்பர் |
| | | குடல் | குடர் |

### மரூஉ

இயல்பாக வழங்கி வரும் சொற்கள் சில இலக்கணச் சிதைவடைந்தும், சொல்லுருவங் கெட்டும் சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கி வரும் சொற்கள் மரூஉச் சொற்கள் எனப்படும்.

| இலக்கணமுடையது | மரூஉ |
|---|---|
| சோழநாடு | சோணாடு |
| கைதகி | கைதடி |
| புத்தூர் | புதூர் |
| பெயர் | பேர் |
| திகதி | தேதி |
| திரிகோணமலை | திருகோணமலை |
| பத்தாம்பதி | வற்றாப்பளை |
| ஆடுதொடாப்பாலை | ஆடாதோடை |
| சுருதி | சுதி |
| அருமருந்தன்ன | அருமந்த |

### தகுதி வழக்கு

ஒரு பொருளைக்குறிக்குஞ் சொல் மக்கள் பேசுவதற்குத் தகுதி உடையதாக இருக்க வேண்டும். தகுதி இல்லையெனில் அச்சொல்லை நீக்கி விடுவர். இங்ஙனம் தகுதி இல்லாத சொல்லை நீக்கி விட்டு வேறொரு சொல்லாற் சொல்வது தகுதி என்று நினைத்துக் கூறுவது தகுதி வழக்கு எனப்படும். இது மூன்று வகைப்படும்.

1.இடக்கரடக்கல்

2.மங்கலம்

3.குழுஉக்குறி

### இடக்கரடக்கல்

ஆன்றோர் முன்னிலையில் கூறத்தகாத சொற்களைக் கூறாது மறைத்துப் பிற மொழிகளால் அக்கருத்தைப் புலப்படுத்துவது இடக்கரடக்கல் எனப்படும்.

| | | |
|---|---|---|
| மலங் கழுவி வந்தான் | - | கால்கழுவி வந்தான் |
| மலங்கழித்தல் | - | கொல்லைக்குப்போதல் |
| சிறுநீர்கழித்தல் | - | ஒன்றுக்குப்போதல் |

### மங்கலம்

அமங்கலமாகச் சொல்வதைத் தவிர்த்து மங்கலமாகக் கூறுவது.

| அமங்கலவழக்கு | மங்கலவழக்கு |
|---|---|
| இறந்தார் | இறையடி எய்தினார் |
| | துஞ்சினார் (இயற்கை எய்தி விட்டார்) |
| நச்சுப்பாம்பு | நல்லபாம்பு |
| தாலி அறுந்தது | தாலி பெருகிற்று |
| காராடு | வெள்ளாடு |

### குழூஉக்குறி

ஒரு கூட்டத்தார் மற்றவருக்குத் தெரியாமல் தங்களுக்குத் தெரியும் வகையில் வழங்கிக் கொள்ளுஞ் சொல் குழூஉக்குறி எனப்படும்.

துணிக்கடைகளில் துணிகளின் அடக்கவிலைகள் தமக்கு மட்டும் தெரியும் உண்மை எழுத்துக்களால் குறித்து வைத்தல்

முட்டை வியாபாரிகள் முட்டையை கொக்கு என அழைப்பர்.

அந்தணர்கள் தோசையை சர்க்கரைத்தாழ்வான் என அழைப்பர்.

பொற்கொல்லர் பொன்னைப் ‘பறி’ என அழைப்பர்.

### பயிற்சி

1. பின்வருவனவற்றின் மரூஉ வழக்குகளை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| புத்தூர் | அருமருந்தன்ன | முகக்கூடு |
| சிகைக்காய் | வாழ்நாள் | அகப்பை |

2. பின்வருவனவற்றின் மங்கலமான சொற்களை இனங்கண்டு எழுதுங்கள்.

   சுடுகாடு, பிணம், மாங்கல்யம், செத்தார், நல்லபாம்பு, காலமாகிவிட்டார்.

3. உங்கள் பிரதேசத்தில் வழங்கும் குழூஉக் குறிச் சொற்களைத்தேடிப் பெற்றுக் காட்சிப்படுத்துங்கள்.